©
GOVERNMENT OF TAMIL NADU
2010

[Regd. No. TN/CCN/467/2009-11.
[R. Dis. No. 197/2009.
[Price: Re. 0.80 Paise.

# TAMIL NADU GOVERNMENT GAZETTE

**EXTRAORDINARY** PUBLISHED BY AUTHORITY

No. 132] CHENNAI, FRIDAY, MAY 7, 2010
Chithirai 24, Thiruvalluvar Aandu–2041

## Part VI—Section 2

**Notifications or Orders of interest to a section of the public issued by Heads of Departments, etc.**

### NOTIFICATIONS BY HEADS OF DEPARTMENTS, ETC.

#### COLLECTORS AND LOCAL AUTHORITIES

**ஊராட்சிகளின் ஆய்வாளர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர், காஞ்சிபுரம்**

**காஞ்சிபுரம் மாவட்டம், காஞ்சிபுரம் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட, விப்பேடு ஊராட்சி மன்றத் தலைவர் பதவி நீக்கம் செய்தல் பற்றிய அறிவிக்கை.**

[*ந.க.எண் 2844/09/அ4/உ.இ.(ஊ)*]

**No. VI(2)/173(a-1)/2010.**

தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், 1994, பிரிவு 205 மற்றும் உட்பிரிவுகளின்படி ஊராட்சிகளின் ஆய்வாளர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவருக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படி காஞ்சிபுரம் மாவட்டம், காஞ்சிபுரம் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த விப்பேடு ஊராட்சி மன்றத் தலைவர் திரு. பா. தேவபாலன் என்பவர் ஊராட்சி பொது நிதியிலிருந்து நிதி முறைகேடு செய்து, விதிகளைமீறி செயல்பட்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்ட பிரிவின்கீழ் வழங்கப்பட்ட அதிகாரத்தினை துஷ்பிரயோகம் செய்து நிதி இழப்பீடு ஏற்படுத்தியுள்ளது தொடர்பாக அன்னார் மீது தெரிவிக்கப்பட்ட குற்றச்சாட்டுகள், அக்குற்றச்சாட்டுகளுக்கு அவரால் அளிக்கப்பட்ட விளக்கங்கள் மற்றும் மேற்குறிப்பிட்ட ஊராட்சி மன்றத்தின் கருத்தினை பரிசீலனை செய்து எனது உளத்தேர்வின்படி விப்பேடு ஊராட்சி மன்றத் தலைவர் திரு. பா. தேவபாலன் என்பவரை ஊராட்சி மன்றத் தலைவர் பதவியிலிருந்து நீக்கம் செய்து அறிவிக்கப்படுகிறது.

இந்த அறிவிக்கை தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், 1994, பிரிவு 262 (1)—ன்படி ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்படும் நாளிலிருந்து அமுலுக்கு வரும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

காஞ்சிபுரம்,
2010 மே 5.

**சந்தோஷ் K. மிஸ்ரா,**
*ஊராட்சிகளின் ஆய்வாளர் மற்றும்*
*மாவட்ட ஆட்சித் தலைவர்.*

**காஞ்சிபுரம் மாவட்டம், காஞ்சிபுரம் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட விப்பேடு ஊராட்சி மன்றத் துணைத் தலைவர் பதவி நீக்கம் செய்தல் பற்றிய அறிவிக்கை.**

[*ந.க.எண் 2844/09/அ4/உ.இ.(ஊ)*]

**No. VI(2)/173(a-2)/2010.**

தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், 1994, பிரிவு 206 மற்றும் உட்பிரிவுகளின்படி ஊராட்சிகளின் ஆய்வாளர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவருக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படி காஞ்சிபுரம் மாவட்டம், காஞ்சிபுரம் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த விப்பேடு ஊராட்சி மன்றத் துணைத் தலைவர் திருமதி கோமதி அமரேசன் என்பவர் ஊராட்சி பொது நிதியிலிருந்து நிதி முறைகேடு செய்து, விதிகளைமீறி செயல்பட்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்ட பிரிவின்கீழ் வழங்கப்பட்ட அதிகாரத்தினை துஷ்பிரயோகம் செய்து நிதி இழப்பீடு ஏற்படுத்தியுள்ளது தொடர்பாக அன்னார் மீது தெரிவிக்கப்பட்ட குற்றச்சாட்டுகள், அக்குற்றச்சாட்டுகளுக்கு அவரால் அளிக்கப்பட்ட விளக்கங்கள் மற்றும் மேற்குறிப்பிட்ட ஊராட்சி மன்றத்தின் கருத்தினை பரிசீலனை செய்து எனது உளத்தேர்வின்படி விப்பேடு ஊராட்சி மன்றத் துணைத் தலைவர் திருமதி கோமதி அமரேசன் என்பவரை ஊராட்சி மன்றத் துணைத் தலைவர் •பதவியிலிருந்து நீக்கம் செய்து அறிவிக்கப்படுகிறது.

இந்த அறிவிக்கை தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், 1994, பிரிவு 262 (1)–ன்படி ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்படும் நாளிலிருந்து அமுலுக்கு வரும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

காஞ்சிபுரம்,
2010 மே 5.

**சந்தோஷ் K. மிஸ்ரா,**
*ஊராட்சிகளின் ஆய்வாளர் மற்றும்*
*மாவட்ட ஆட்சித் தலைவர்.*

தமிழ்நாடு அரசுக்காக சென்னை எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை இயக்குநரால்
அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.